## மே – 11 – வெள்ளி

### புனித இஞ்ஞாசியார்

### "அஞ்சாதே பேசிக்கொண்டேயிரு நிறுத்தாதே"– திபணி18:9

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 18 : 9 - 18

பவுல் கொரிந்து நகரில் இருந்தபோது ஒரு இரவில் ஆண்டவர் பவுலுக்குக் காட்சியில் தோன்றி, "அஞ்சாதே பேசிக்கொண்டேயிரு. நிறுத்தாதே.ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன். எவரும் உனக்குத் தீங்கிழைக்கப் போவதில்லை. இந்நகரத்தில் எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர்" என்று சொன்னார். அவர் அவர்களுக்கு ஓர் ஆண்டு ஆறுமாதம் இறைவார்த்தையைக் கற்பித்து அங்கேயே தங்கியிருந்தார்.கல்லியோ என்பவர் அக்காயா நாட்டின் ஆட்சியாளாராக இருந்தபோது யூதர்கள் ஒருமித்து, பவுலைத்தாக்கி, அவரை நடுவர் மன்றத்துக்குக் கூட்டிக் கொண்டுவந்து,"இவன் திருச்சட்டத்துக்கு எதிரான முறையில் கடவுளை வழிபடுமாறு மக்களைத் தூண்டிவிடுகிறான்" என்றார்கள். பவுல் பேச வாயெடுத்தபோது கல்லியோ அவர்களை நோக்கி, "யூதர்களே, ஏதாவது குற்றமோ பழிபாவமோ இருக்குமாயின் நான் பொறுமையுடன் உங்கள் வழக்கைக் கேட்டிருப்பேன்.ஆனால் இது சொற்களையும் பெயர்களையும் உங்கள் திருச்சட்டத்தையும் பற்றிய சிக்கலாய் இருப்பதால் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் இதில் நடுவராயிருக்க நான் விரும்பவில்லை" என்றுகூறி, அவர்களை நடுவர் மன்றத்திலிருந்து துரத்திவிட்டார். உடனே அவர்கள் அனைவரும் தொழுகைக் கூடத்தலைவரான சொஸ்தேனைப் பிடித்து நடுவர் மன்றத்துக்கு முன்பாக அடித்தனர். ஆனால் கல்லியோ எதையும் பொருட்படுத்தவில்லை.பவுல் பல நாள்கள் கொரிந்துவிலுள்ள சகோதரர் சகோதரிகளிடம் தங்கியிருந்தார். அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டுத் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றக் கெங்கிரேயா நகரில் முடிவெட்டிக்கொண்டு, அக்கில்லா பிரிஸ்கில்லா ஆகியோருடன் சிரியாவுக்குக் கப்பலேறினார்.

**பதில்பாடல் :** கடவுளே அனைத்து உலகின் வேந்தர் நீரே

### நற்செய்தி : யோவான் 16 : 20 – 23

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது :உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது தாய் தனக்குப் பேறுகாலம் வந்துவிட்டதால் வேதனை அடைகிறார். ஆனால் பிள்ளையைப் பெற்றெடுத்த பின்பு உலகில் ஒரு மனித உயிர் தோன்றியுள்ளது என்னும் மகிழ்ச்சியால் தம் வேதனையை அவர் மறந்துவிடுகிறார்.இப்போது நீங்களும் துயருறுகிறீர்கள். ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது. அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** "உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்கு முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்" (யோவான்15:18) என்ற நற்செய்தியின் விருதுவாக்கிற்கமைவாக வாழ்ந்த புனிதர் இஞ்ஞாசியாரை இன்று அன்னையாம் திரு அவை நினைவு கூருகின்றாள். நாமும் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு, மற்றும் பரிசுத்த ஆவி விழா என்பவற்றை நெருங்கும் இந்நாட்களில் எமது துணையாளரும், தேற்றரவாளரும், எமக்குப்புதுப்பெலன் தருபவருமான பரிசுத்த ஆவியாரை எமது உள்ளங்களில் வரவேற்பதில் ஆர்வம் காட்ட முயல்வோம். மனிதர்களான நாம் இவ்வுலக அதிபதி சாத்தானின் சோதனைகளுக்கு உள்ளாகி சாவு, மரணம் என்பவற்றின் வேதனைகளால் துயருறுவது உண்மை. எனினும் இறைமகன் இயேசு தமது பரிசுத்த மரணம், உயிர்ப்பு என்பவற்றால் சாத்தானை வென்றெடுத்து, எம்மை பரலோக தகப்பனோடு ஒன்றாக்கியுள்ளார். இதற்கு அடையாளமாகவே துணையாளராம் பரிசுத்த ஆவி பெந்தகோஸ்தே நாளில் அக்கினி நாக்கு வடிவில் இறங்கி வந்து திருச்சீடர்களை உறுதிப்படுத்தினார். இறைமகன் இயேசு இவ்வுலகை விட்டுப்பிரிகின்ற வேளையில் தமது சீடர்கள் அடையக்கூடிய வேதனை, துயர் என்பவற்றை அன்னையரின் பிரசவ வேதனையோடு ஒப்பிடுகிறார் என இறையியலாளர்கள் கூறுகின்றனர். பிரசவத்தின் போது ஒவ்வொரு அன்னையரும் தமது தாய்மையின் கடமையை நம்பிக்கையோடு நிறைவேற்றி எவ்வாறு மகிழ்ச்சியடைகின்றார்களோ, அவ்வாறே நாமும் இறைவனிலே வைத்துள்ள நம்பிக்கையை இழக்கக்கூடாது எனக் குறிப்பிடுகின்றனர். எனவே, இவ்வுலகில் ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை விசுவாசம் வைத்து வாழும் எமக்கு வரும் துன்பதுயரங்கள் அனைத்தும் தற்காலிகமானவையே என ஏற்றுக்கொள்வோம். ஆகவே, எம்மைக் கிறிஸ்தவர்கள் என அழைக்கும் நாமும் அன்று திருச்சீடர்கள் ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை வைத்துக் காத்திருந்து ஜெபித்தது போன்று, தொடர்ச்சியாக விடாப்பிடியோடு ஜெபத்தில் அனுதினமும் நிலைத்திருக்கக் கற்றுக்கொள்வோம். அன்னை மரியாவோடு அன்று மேலறையில் ஜெபத்தில் நிலைத்திருந்த திருத்தூதர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டது போன்று, நாமும் ஆவியானவரது வருகைக்காக எம்மைத் தாயர்செய்வது மட்டுமல்ல, ஆவியாரின் மகிமையைக் குறித்து அஞ்சாது, நிறுத்தாது, தொடர்ந்து பேசிக்கொண்டேயிருப்போம்.